அரசாங்க நிருவாக சுற்றிக்கை இல: 06/98

எனது இல:11/719/E/201/42

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.
1998 மார்ச் மாதம் 14 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்,

## திடீர் மரண பரிசோதகர்களின் கொடுப்பனவுகள்

தாபன விதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் பால் உங்களது கவனத்தைத் திருப்புகிறேன். அதன் 3:4 மற்றும் 3:5 ஆம் பிரிவுகளால் குறிப்பிடப்பட்டுள்ள மைலுக்கான கூலி மற்றும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மைலுக்கான கூலி மற்றும் வாழ்க்கைப்படி என்பன பின்வருமாறு திருத்தி யமைக்கப்படுகிறது.

**3:4 ஆம் பிரிவு:-**

பொதுப் போக்குவரத்துச் சேவையொன்று இல்லாத பாதையொன்றில் செய்கின்ற ஒரு பயணத்திற்கோ அல்லது பயணத்தின் ஒரு பகுதிக்கு மைல் ஒன்றுக்கு ரூபா 10/- வீதம் செலுத்தப்படும்.

**3:5 ஆம் பிரிவு:-**

அரசசாங்க சம்பளத்தையுடைய உத்தியோகத்தர்கள் அல்லாத திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு இன்க்வெஸ்ட் விசாரணை ஒன்றுக்காக வீட்டிலிருந்து புறப்பட்டு இருக்க வேண்டிய காலப்பகுதிகாக பின்வரும் கட்டண அளவுகளின்படி வாழ்க்கைப்படி செலுத்தப்படும்.

| | |
|---|---|
| ஒவ்வொரு முழுமையான 24 மணித்தியாலங்களுக்கும் | : ரூபா 280.00 |
| 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்திற்கு | : ரூபா 280.00 |
| 6 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்திற்கு | : ரூபா 140.00 |

இந்த திருத்தியமைக்கப்பட்ட கொடுப்பனவுகள் 1998 ஜனவரி 01 ஆந் திகதி அமுலாக்கப்படும். இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒப்புதலுடன் பிரசுரிக்கப்படுகிறது.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்.
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

THED/11/1